கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிவகிரி

முன்னிலை- திருமதி.K.L.பிரியங்கா, B.A., B.L.(Hons.),

கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிவகிரி

2020-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17-ம் நாள் திங்கட்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்-61/2019

*******

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.377/18 ...குற்றமுறையிடுபவர்

/எதிர்/

1)இராஜேஷ், வயது 24/19,
த/பெ முனியசாமி,
சிவகிரி.
2)ரமேஷ், வயது 22/19,
த/பெ முனியசாமி,
சிவகிரி.
3)குமாரி, வயது 41/19,
க/பெ முனியசாமி,
சிவகிரி. ...எதிரிகள்

இந்த வழக்கானது 11/02/2020 -ம் தேதியன்று என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும், எதிரிகளுக்காக வழக்கறிஞர் திரு.வி.தெய்வக்குமார் அவர்களும் ஆஜராகி நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கின் 1,2 சாட்சிகள் வசித்து வரும் வீட்டிற்கும், எதிரிகளின் வீட்டிற்கும் இடையே உள்ள பொதுச் சுவர் சம்பந்தமாக பிரச்சனை இருந்துள்ளதால், எதிரிகள் 2-வது சாட்சி மீது பகையுணர்வுடன் இருந்து வந்துள்ள நிலையில், 06/11/2018-ம் தேதி இரவு 07.30 மணியளவில் 2-வது சாட்சி அவரது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது, அங்கு நின்ற 3-வது எதிரி பொதுச் சுவர் சம்பந்தமான பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு, 2-வது சாட்சியைப் பார்த்து, "இந்த சுவர் எங்களுக்குப் பாத்தியப்பட்டது. நீ எப்படி உரிமை கொண்டாடலாம்" என்று அசிங்கமாக பேசியதற்கு 2-வது சாட்சி "வெளிநாட்டில் வேலை பார்க்கும் தன் கணவர் வந்தவுடன் பேசிக்கொள்ளலாம், தேவையில்லாமல்

அசிங்கமாகப் பேசாதீங்க என்று கூறியவுடனே, பக்கத்தில் நின்ற குமாரியின் மகன்களான 1,2 எதிரிகள், 2-வது சாட்சியைப் பெண் என்றும் பாராமல் "ஏ கூதி மகளே, என் அம்மாவை எதிர்த்துப் பேசுவியோ" என்று சொல்லி கீழே தள்ளி 2-வது சாட்சியின் நெஞ்சில் மாறி, மாறி மிதித்தும் பின்பு 3-வது எதிரி கையால், 2-வது சாட்சியின் நெஞ்சில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், பின்பு 1 முதல் 3 வரையான எதிரிகள் 3 பேரும் சேர்ந்து 2-வது சாட்சியைப் பார்த்து, "இனிமேல் எங்கிட்ட ஏதாவது பிரச்சனை செய்த உன்ன கொன்னே போடுவோம்" என்று குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாக, 1,2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழும், 3-வது எதிரிமீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)-ன்கீழும், சிவகிரி காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை சமர்ப்பித்துள்ளார்.

2) எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது வழக்கு நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன்கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, அவைகளைப் பரிசீலனை செய்து பார்க்க போதிய சந்தர்ப்பமும், காலமும் வழங்கப்பட்டு, 1,2 எதிரிகளிடம் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழான குற்றம் குறித்தும், 3-வது எதிரியிடம் இதச பிரிவுகள் 323, 506(1)-ன்கீழான குற்றம் குறித்தும் படித்துக்காட்டி விளக்கிக்கூறி வினவியபோது, தாங்கள் குற்றவாளிகள் இல்லை என எதிரிகள் மறுத்துரைத்தனர். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அ.சா.1 முதல் 4 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் 5 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

4) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்-</u>

இவ்வழக்கின் 1,2 சாட்சிகள் வசித்து வரும் வீட்டிற்கும், எதிரிகளின் வீட்டிற்கும் இடையே உள்ள பொதுச் சுவர் சம்பந்தமாக பிரச்சனை இருந்துள்ளதால், எதிரிகள் 2-வது சாட்சி மீது

பகையுணர்வுடன் இருந்து வந்துள்ள நிலையில், 06/11/2018-ம் தேதி இரவு 07.30 மணியளவில் 2-வது சாட்சி அவரது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது, அங்கு நின்ற 3-வது எதிரி பொதுச் சுவர் சம்பந்தமான பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு, 2-வது சாட்சியைப் பார்த்து, "இந்த சுவர் எங்களுக்குப் பாத்தியப்பட்டது. நீ எப்படி உரிமை கொண்டாடலாம்" என்று அசிங்கமாக பேசியதற்கு 2-வது சாட்சி "வெளிநாட்டில் வேலை பார்க்கும் தன் கணவர் வந்தவுடன் பேசிக்கொள்ளலாம், தேவையில்லாமல் அசிங்கமாகப் பேசாதீங்க என்று கூறியவுடனே, பக்கத்தில் நின்ற குமாரியின் மகன்களான 1,2 எதிரிகள், 2-வது சாட்சியைப் பெண் என்றும் பாராமல் "ஏ கூதி மகளே, என் அம்மாவை எதிர்த்துப் பேசுவியோ" என்று சொல்லி கீழே தள்ளி 2-வது சாட்சியின் நெஞ்சில் மாறி, மாறி மிதித்தும் பின்பு 3-வது எதிரி கையால், 2-வது சாட்சியின் நெஞ்சில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், பின்பு 1 முதல் 3 வரையான எதிரிகள் 3 பேரும் சேர்ந்து 2-வது சாட்சியைப் பார்த்து, "இனிமேல் எங்கிட்ட ஏதாவது பிரச்சனை செய்த உன்ன கொன்னே போடுவோம்" என்று குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாக, 1-வது சாட்சி செல்வி.துர்கா என்பவர் தென்காசி அரசு மருத்துவமனையில் வைத்துக் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கு சிறப்பு சார்பாய்வாளர் திரு.கண்ணன் என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் சார்பாய்வாளர் திரு.அமிர்தராஜ் என்பவர் 07/11/2018-ம் தேதி' 10.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் திரு.ஊர்காவலன் மற்றும் திரு.மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் வழக்கின் சம்பவ இடத்தினைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார். பின்பு சாட்சிப்பட்டியலில் உள்ள சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். 24/11/2018-ம் தேதி மருத்துவரை விசாரித்து விபத்துப் பதிவேட்டு நகல் பெற்றார். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

5) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு-</u>

அ.சா.1 செல்வி.துர்கா, தனது சாட்சியத்தில், போன வருடம் இரவு 09.30 மணியளவில் தனது அம்மா வீட்டின் முன்பு நின்றபோது கூட்டமாக வந்து தனது அம்மாவைப் பார்த்து ஆபாசமாகப் பேசி தனது அம்மாவை கீழே தள்ளிவிட்டு கையால் நெஞ்சில் அடித்துக் காயத்தை ஏற்படுத்திவிட்டு

கொன்றுவிடுவதாக மிரட்டிவிட்டுப் போய்விட்டார்கள் என்றும், காயம்பட்ட தனது அம்மாவை தான் சிகிச்சைக்காக சிவகிரி அரசு மருத்துவமனைக்கும், பின்பு மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கும் கொண்டு சென்றேன் என்றும், தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் தன்னிடத்தில் வந்து கையெழுத்து கேட்டார்கள் என்றும், அதனால் தான் போட்டதாகவும், அதில் என்ன இருந்தது என்று தனக்குத் தெரியாது என்றும், கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியமளித்துள்ளார்.

6) அ.சா.2 திருமதி.செல்லம்மாள், தனது சாட்சியத்தில், போன வருடம் இரவு 07.30 மணியளவில் தான் வீட்டின் முன்பு நின்றபோது கூட்டமாக வந்து தன்னைப் பார்த்து ஆபாசமாகப் பேசி, தன்னைக் கீழே தள்ளிவிட்ட கையால் நெஞ்சில் அடித்துக் காயத்தை ஏற்படுத்திவிட்டு, கொன்றுவிடுவதாக மிரட்டிவிட்டு போய்விட்டார்கள் என்றும், அவர்கள் அடித்ததில் தான் மயங்கிவிட்டதாகவும், தனது மகள் புகார் கொடுத்த விபரம் தனக்குத் தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியமளித்துள்ளார்.

7) அ.சா.3 திரு.இசக்கிராஜ், தனது சாட்சியத்தில், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8) அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் பிறழ் சாட்சிகளாகக் கருதப்பட்டு, அரசு தரப்பில் மேற்படி அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகள் சாட்சிகள் குறுக்குவிசாரணை செய்யப்பட்டனர்.

9) இவ்வழக்கின் கூடுதல் சாட்சி 1-ஆன அ.சா.4 திரு.ரமேஷ்குமார், முதல் நிலைக் காவலர், தனது சாட்சியத்தில் இதற்கு முன்பு பணியாற்றிய சிறப்பு சார்பாய்வாளர் திரு.கண்ணன் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் திரு.அமிர்தராஜ் ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு

நன்றாகத் தெரியும் என்றும், கடந்த 07/11/2018-ம் தேதி இரவு 09.30 மணியளவில் சிறப்பு சார்பாய்வாளர் திரு.கண்ணன், நிலையப் பொறுப்பில் இருந்த போது தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலைப் பெற்று, அங்கு சென்று 1-வது சாட்சி செலவி.துர்கா என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கினை பதிவு செய்தார் என்றும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 என்றும், அச்சுப் படிவ முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், அதன்பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் சார்பாய்வாளர் திரு.அமிர்தராஜ் என்பவர் 07/11/2018-ம் தேதி 10.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் திருமதி.ஊர்காவலன் மற்றும் திரு.மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் வழக்கின் சம்பவ இடத்தினைப் பார்வையிட்டு அ.சா.ஆ.4-ஆன பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5-ஆன மாதிரிவரைபடம் தயார் செய்தார் என்றும், பின்பு சாட்சிப்பட்டியலில் உள்ள சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், 24/11/2018-ம் தேதி மருத்துவரை விசாரித்து அ.சா.ஆ.6-ஆன விபத்துப் பதிவேட்டு நகல் பெற்றார் என்றும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் இரு தரப்பினரும் சமாதானம் ஆனதாக கருதி சமாதான மனு கு.வி.மு.ச.பிரிவு 320-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், இவ்வழக்கின் குற்றமானது சமாதானம் செய்யக்கூடியது இல்லை என்ற காரணத்தினால், அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

11) அரசு தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான குற்றம் சாட்டப்பட்ட சங்கதிகளைக் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)-ன்கீழ் வினவியபோது எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று கூறினர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவியபோது எதிரிகள் சாட்சிகள் இல்லை என்று கூறினர். எனவே எதிரிகள் தரப்பு முடிக்கப்பட்டது.

12) பின்னிட்டு இரு தரப்பு வாத உரைகளும் கேட்கப்பட்டன.

13) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றைப் பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்,

"எதிரிகள் மீதான குற்றமானது அரசு தரப்பில் சந்தேகமற

நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

என்பதேயாகும்.

14)அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பந்தமாக காவல் துறையினரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்த நபரான அ.சா.1 செல்வி.துர்கா, இவ்வழக்கு சம்பவத்தில் காயமடைந்த சாட்சியான அ.சா.2 திருமதி.செல்லம்மாள் மற்றும் இவ்வழக்கு சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 திரு.இசக்கிராஜ் ஆகிய மூவரும் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர் என்றும், இதனால் அ.சா.1,2,3 சாட்சிகளின் சாட்சியத்தை ஏற்க வேண்டியதில்லை என்றும், இவ்வழக்கின் கூடுதல் சாட்சி 1-ஆன அ.சா.4-ஆன முதல் நிலைக் காவலரின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கவேண்டுமென்றும் வாதிட்டார்.

15)இந்த வழக்கில் ஆஜரான எதிரிகள் தரப்பு வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்த நபரான அ.சா.1, சம்பவத்தில் காயமடைந்த சாட்சியான அ.சா.2 மற்றும் சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 ஆகிய மூவரும் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக உள்ளதாகவும், எனவே, எதிரிகளைக் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து உத்தரவிடவேண்டுமென்றும் எடுத்துரைத்தார்.

16) மேற்கூறிய வழக்கினை ஆராய்ந்து பார்க்கும்போது அ.சா.ஆ.2-ஆன புகார் வாக்குமூலத்தைச் சார்ந்தே அ.சா.ஆ.3-ஆன முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிக்கை ஆகிய ஆவணங்கள் எவ்வித முரண்பாடின்றி உள்ளது.

17)இவ்வழக்கு சம்பவம் குறித்து காவல்துறையினரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்த

சாட்சியான அ.சா.1 செல்வி.துர்கா, தனது சாட்சியத்தில், போன வருடம் இரவு 09.30 மணியளவில் தனது அம்மா வீட்டின் முன்பு நின்றபோது கூட்டமாக வந்து தனது அம்மாவைப் பார்த்து ஆபாசமாகப் பேசி தனது அம்மாவை கீழே தள்ளிவிட்டு கையால் நெஞ்சில் அடித்துக் காயத்தை ஏற்படுத்திவிட்டு கொன்றுவிடுவதாக மிரட்டிவிட்டுப் போய்விட்டார்கள் என்றும், காயம்பட்ட தனது அம்மாவை தான் சிகிச்சைக்காக சிவகிரி அரசு மருத்துவமனைக்கும், பின்பு மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கும் கொண்டு சென்றேன் என்றும், தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் தன்னிடத்தில் வந்து கையெழுத்து கேட்டார்கள் என்றும், அதனால் தான் போட்டதாகவும், அதில் என்ன இருந்தது என்று தனக்குத் தெரியாது என்றும், கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாகியுள்ளார். அ.சா.1 மேற்கண்டவாறு தனது அம்மா வீட்டின் முன்பு நின்றபோது கூட்டமாக வந்து தனது அம்மாவைப் பார்த்து ஆபாசமாகப் பேசி தனது அம்மாவை கீழே தள்ளிவிட்டு கையால் நெஞ்சில் அடித்துக் காயத்தை ஏற்படுத்திவிட்டு கொன்றுவிடுவதாக மிரட்டிவிட்டுப் போய்விட்டார்கள் என்று சாட்சியமளித்திருந்தபோதிலும், எதிரிகள்தான் மேற்படி குற்றச் செயல்களைச் செய்ததாக அ.சா.1 எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. இது அரசு தரப்பு வழக்கைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. இந்நிலையில், அ.சா.1-ன் சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டதாகக் கருத இயலாது.

18) இவ்வழக்கு சம்பவத்தின்போது காயமடைந்த சாட்சியான அ.சா.2 திருமதி.செல்லம்மாள், தனது சாட்சியத்தில், போன வருடம் இரவு 07.30 மணியளவில் தான் வீட்டின் முன்பு நின்றபோது கூட்டமாக வந்து தன்னைப் பார்த்து ஆபாசமாகப் பேசி, தன்னைக் கீழே தள்ளிவிட்ட கையால் நெஞ்சில் அடித்துக் காயத்தை ஏற்படுத்திவிட்டு, கொன்றுவிடுவதாக மிரட்டிவிட்டு போய்விட்டார்கள் என்றும், அவர்கள் அடித்ததில் தான் மயங்கிவிட்டதாகவும், தனது மகள் புகார் கொடுத்த விபரம் தனக்குத் தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாகியுள்ளார். அ.சா.2 மேற்கண்டவாறு தான் வீட்டின் முன்பு நின்றபோது கூட்டமாக

வந்து தன்னைப் பார்த்து ஆபாசமாகப் பேசி, தன்னைக் கீழே தள்ளிவிட்ட கையால் நெஞ்சில் அடித்துக் காயத்தை ஏற்படுத்திவிட்டு, கொன்றுவிடுவதாக மிரட்டிவிட்டு போய்விட்டார்கள் என்றும், அவர்கள் அடித்ததில் தான் மயங்கிவிட்டதாக சாட்சியமளித்திருந்தபோதிலும், எதிரிகள் தான் மேற்படி குற்றச் செயல்களைச் செய்ததாக அ.சா.2 எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. இது அரசு தரப்பு வழக்கைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. இந்நிலையில், அ.சா.2-ன் சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டதாகக் கருத இயலாது.

19) இவ்வழக்கின் சம்பவ சாட்சியான அ.சா.3 திரு.இசக்கிராஜ், தனது சாட்சியத்தில் சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளிதத்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாகியுள்ளார். அ.சா.3 மேற்கண்டவாறு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளது அரசு தரப்பு வழக்கைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. இந்நிலையில், அ.சா.3-ன் சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டதாகக் கருத இயலாது.

20) இவ்வழக்கின் கூடுதல் சாட்சி 1-ஆன அ.சா.4 திரு.ரமேஷ்குமார், முதல் நிலைக் காவலர், தனது சாட்சியத்தில் இதற்கு முன்பு பணியாற்றிய சிறப்பு சார்பாய்வாளர் திரு.கண்ணன் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் திரு.அமிர்தராஜ் ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு நன்றாகத் தெரியும் என்றும், கடந்த 07/11/2018-ம் தேதி இரவு 09.30 மணியளவில் சிறப்பு சார்பாய்வாளர் திரு.கண்ணன், நிலையப் பொறுப்பில் இருந்த போது தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலைப் பெற்று, அங்கு சென்று 1-வது சாட்சி செலவி.துர்கா என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கினை பதிவு செய்தார் என்றும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 என்றும், அச்சுப் படிவ முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், அதன்பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் சார்பாய்வாளர் திரு.அமிர்தராஜ் என்பவர் 07/11/2018-ம் தேதி 10.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் திருமதி.ஊர்காவலன் மற்றும் திரு.மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் வழக்கின் சம்பவ

இடத்தினைப் பார்வையிட்டு அ.சா.ஆ.4-ஆன பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5-ஆன மாதிரிவரைபடம் தயார் செய்தார் என்றும், பின்பு சாட்சிப்பட்டியலில் உள்ள சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், 24/11/2018-ம் தேதி மருத்துவரை விசாரித்து அ.சா.ஆ.6-ஆன விபத்துப் பதிவேட்டு நகல் பெற்றார் என்றும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியுடன் பணிபுரிந்த அவரது கையெழுத்து மற்றும் கையொப்பத்தை நன்கு அறிந்த கூடுதல் சாட்சி 1-ஆன முதல் நிலைக்காவரான அ.சா.4-ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளைக் குற்றவாளிகள் என்று கருதி முடிவுக்கு வர இயலாது.

21) இவ்வழக்கைப் பொறுத்தமட்டில் புகார் வாக்குமூலம் கொடுத்த சாட்சியான அ.சா.1 அரசுத் தரப்பில் பிறழ் சாட்சியாகி உள்ளார். மேலும், இவ்வழக்கு சம்பவத்தின்போது காயமடைந்த சாட்சியான அ.சா.2-ம், இவ்வழக்கு சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3-ம் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாகியுள்ளனர். இந்நிலையில் அ.சா.1,2,3 சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் எதிரிகளைக் குற்றவாளிகள் என தீர்மானிக்க இயலாது. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியுடன் பணிபுரிந்த அவரது கையெழுத்து மற்றும் கையொப்பத்தை நன்கு அறிந்த கூடுதல் சாட்சி 1-ஆன முதல் நிலைக்காவரான அ.சா.4-ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளைக் குற்றவாளிகள் என்று கருதி முடிவுக்கு வர இயலாத காரணத்தினால் இவ்வழக்கிலிருந்து எதிரிகளை விடுவித்து உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22) இறுதியாக, இவ்வழக்கின் 1,2 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழும், 3-வது எதிரி இதச பிரிவுகள் 323, 506(1)-ன்கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

23) இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் ஆஜர்படுத்தப்படவில்லை.

24) இவ்வழக்கின் 1,2 எதிரிகள் இருவரும் 07/11/2018-ம் தேதியன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு, 13/11/2018-ம் தேதிய இந்நீதிமன்ற உத்தரவின்படி 13/11/2018-ம் தேதியன்றே பிணையில் சென்றுள்ளனர். இவ்வழக்கின் 3-வது எதிரி 14/11/2018-ம் தேதிய மாண்புமிகு திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவின்படி 26/11/2018-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2020-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17-ம் நாளன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்.)K.L. பிரியங்கா
கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், சிவகிரி

அரசு தரப்பு சாட்சிகள்-

1. செல்வி.துர்கா
2. திருமதி.செல்லம்மாள்
3. திரு.இசக்கிராஜ்
4. திரு.ரமேஷ்குமார், முதல் நிலைக் காவலர்

அரசு தரப்பு சான்றாவணங்கள்-

| வ.எண். | தேதி | சான்றாவணங்கள் விவரம் |
|---|---|---|
| 1 | 07/11/2018 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம். |
| 2 | 07/11/2018 | புகார் வாக்குமூலம். |
| 3 | 07/11/2018 | முதல் தகவல் அறிக்கை. |
| 4 | 07/11/2018 | பார்வை மகஜர். |
| 5 | 07/11/2018 | மாதிரி வரைபடம். |
| 6 | 06/11/2018 | விபத்துப் பதிவேட்டு நகல். |

<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்-</u> இல்லை.

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்-</u> இல்லை

<u>பிற்சேர்க்கை</u>

| | |
|---|---|
| 1 | இவ்வழக்கின் 1,2 எதிரிகள் இருவரும் 07/11/2018-ம் தேதியன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு, 13/11/2018-ம் தேதிய இந்நீதிமன்ற உத்தரவின்படி 13/11/2018-ம் தேதியன்றே பிணையில் சென்றுள்ளனர். இவ்வழக்கின் 3-வது எதிரி 14/11/2018-ம் தேதிய மாண்புமிகு திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவின்படி 26/11/2018-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார். |
| 2 | இவ்வழக்கின் 3-வது எதிரி விசாரணையின்போது பிணையில் இருந்து வந்தார். |
| 3 | சாட்சிகளை 3 தினங்களுக்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 4 | சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு வழக்கின் முடிவு பற்றி அறிவிக்கப்பட்டது. |
| 5 | இறுதியாக, இவ்வழக்கின் 1,2 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழும், 3-வது எதிரி இதச பிரிவுகள் 323, 506(1)-ன்கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

(ஒம்.)K.L. பிரியங்கா

நீதித்துறை நடுவர், சிவகிரி

/உண்மை நகல்/